1990 சனவரி 19]

(இ) ஆசிரியர்கள் நியமனத்தில் குறைபாடுகள் இருப்பதாகக் கூறப்பெறுவது குறித்து—தொடர்ச்சி

திரு. மா. சுந்தரதாஸ் : பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நடந்து முடிந்த செகண்டரி கிரேடு டீச்சர்ஸ் அப்பாயின்ட்மென்ட்டிலே 35 வயதானவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்காமல், 19 வயதானவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுத்து, சி.இ.ஓ.க்களுக்கு அதிகாரம் கொடுக்கப்படவில்லை என்றும், பல தவறுகள் நடந்ததாக பல பத்திரிகைகளிலே வந்ததாகப் படித்தேன். தராசு போன்ற பத்திரிகைகளிலே எல்லாம் மிகக் கேவலமாக எழுதியிருந்தார்கள். அந்த அளவுக்கு நான் சொல்ல விரும்பவில்லை. அதெல்லாம் நீங்கள் படித்தது. அந்த அளவுக்கு சி.இ.ஓ-க்களுக்கு அதிகாரம் கொடுக்காமல், எங்கள் மாவட்டத்திலே 35 வயதானவர்களுக்கு வேலையில்லை. 19, 20 வயதானவர்களுக்கு வேலை கொடுத்திருக்கிறார்கள் என்று சொன்னால், இது ஏதோ அநியாயமாக இருக்கிறது. அதை மாண்புமிகு முதல்வர் அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். நிச்சயமாக 35, 32 வயதானவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கப்பட வேண்டும். சி.இ.ஓ-க்களுக்கு அதிகாரம் கொடுக்கப்பட வேண்டும். 19, 20 வயதானவர்களுக்கு எங்கிருந்தோ ஆணை வருகிறது என்று சொல்கிறார்கள். சி.இ.ஓ-க்களுக்குத் தெரியாது என்று சொல்கிறார்கள். பத்திரிகைகளிலே கேவலமாக எழுதுகிறார்கள். இது தமிழ்ச் சமுதாயத்திற்கே கேவலமாக இருக்கிறது. தயவு செய்து இத்தகைய நியமனத்தை ரத்துச் செய்து, சரியான முறையிலே, சி.இ.ஓ-க்களுக்கு அதிகாரம் கொடுத்து நியமனம் செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, முதலாவது, இது குறித்து நீதிமன்றத்திலே வழக்கு இருக்கிறது. அந்த வழக்கு முடிவில் நடைமுறைகளிலே உள்ள குறைகளை ஒரு வேளை நீதிமன்றம் சுட்டிக்காட்டினால் அது ஏற்கப்படும். ஆனால் அதே நேரத்திலே ஏற்கனவே உள்ள விதிமுறைகளைப் பின்பற்றித்தான் செயற்படுத்தப்பட்டு இருக்கிறது. அந்த விதிமுறைகளில் சில குறைபாடுகள் இருக்கலாம். அந்தக் குறைபாடுகளை அறிகிறபோதுதான் திருத்த முடியுமே தவிர ஏற்கனவே உள்ள விதிமுறைகள் அத்தனையையும் இந்த அரசு எந்த வகையிலும் மாற்றவில்லை என்பதையும் ; நீதிமன்றத்தில் வழக்கு இருக்கிற காரணத்தால் அதைப் பற்றி அதிக விளக்கத்தை நான் இந்த நேரத்தில் சொல்வது முறையல்ல என்பதையும் சொல்லி இந்த அளவோடு விடையை நான் முடிக்க விரும்புகிறேன்.

10.35 மணி